**தலைப்பு 208 – தேசிய நூதனசாலைகள் திணைக்களம் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் 2017 ஆம் ஆண்டிற்கான அறிக்கை**

---

2017 இன் 32 ஆம் இலக்க ஒதுக்கீட்டு (திருத்திய) அதிகாரச்சட்டத்தின் மூலம் திருத்தப்பட்ட 2016 இன் 24 ஆம் இலக்க ஒதுக்கீட்டுச் சட்டத்தின் முதலாவது பட்டோலையிலும் இரண்டாவது பட்டோலையிலும் குறிப்பிடப்பட்ட தலைப்பு மற்றும் விடய இலக்கத்தின் கீழ் ஒதுக்கீட்டுக் கணக்கு, இணக்கக்கூற்று என்பன தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்டன. அக்கணக்குகளிலும் இணக்கக்கூற்றுக்களிலும் காட்டப்பட்டுள்ள நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன.

**1.2 பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் நிதி முகாமைத்துவம் மற்றும் கணக்களிதன்மை தொடர்பான பொறுப்பு**

---

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 124 இன் பிரகாரம் அரசின் பண உழைப்பு மற்றும் அரசிற்கு கிடைக்க வேண்டிய பணத்தை சேகரித்தல் உட்பட அரசின் சகல நிதி நடவடிக்கைகளையும் மேற்பார்வை தொடர்பாக பொது அதிகாரம் நிதி அமைச்சருக்கு கையளிக்கப்பட்டுள்ளது. நிதி அமைச்சரால் அப்பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு நிதிப்பிரமாணம் 124(2) பிரகாரம் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்கள் நியமிக்கப்பட்டுள்ளார். நிதிப்பிரமாணம் 125(1)(அ) பிரகாரம் திணைக்களத் தலைவர் தனது திணைக்களத்தின் சகல பணக்கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தராக இருப்பதுடன் வருமானக் கணக்கீட்டு உத்தியோகத்தர் திறைசேரியால் நியமிக்கப்பட்டுள்ளார். பாராளுமன்றத்தால் விதிக்கப்படும் வரையரைகளுக்குள்ளே தமது கடமைகளை நிறைவேற்றி சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குகள் மற்றும் இணக்கக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய நியதிச்சட்ட ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பேணுதல், தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பேணுதல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**1.3 கணக்காய்வில் நோக்கெல்லை**

---

தலைப்பு 208 – தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி மற்றும் பௌதீக செயலாற்றல் தொடர்பாக திட்டமிடல், அரச செலவினங்கள், அரச வருமானங்கள், மனித மற்றும் பௌதீக வள முகாமைத்துவம், உள்ளக கட்டுப்பாட்டு ஏற்பாடுகளைப் பயன்படுத்துதல், சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக்கு இணங்குதல் மற்றும் புத்தகங்கள், பதிவேடுகள், அறிக்கைகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களை நாளதுவரையாக பேணுதல், கணக்குகளைத் தயாரித்து உரிய காலப்பகுதியில் சமர்ப்பித்தல், செயலாற்றல் குறிகாட்டிகளை அடிப்படையாகக் கொண்டு தரப்பினருக்கு இடையே செயலாற்றல் அறிக்கைகளை விநியோகித்தல் தொடர்பாக இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை உரிய காலத்தில் வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள், கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட திட்டங்கள், கணக்குகள், இணக்கக் கூற்றுக்கள் மற்றும் செயலாற்றல் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும். அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின்

வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

## 1.4 கணக்காய்வு அவதானிப்புக்கள்

2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக தேசிய நூதனசாலைகள் திணைக்களத்தில் மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் போது வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அவதானிப்புகளிலிருந்து பொருண்மையான மற்றும் முக்கியத்துவமான கணக்காய்வு அவதானிப்புகள் இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தி முதல் 2.15 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளன. நிதி நிர்வாகத்தின் போதுமானதன்மை உறுதிப்படுத்தப்படும் வகையில் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 128 இல் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க கணக்கீட்டு உத்தியோகத்தராக தமது கணக்களிப்பொறுப்பை திருப்திகரமாக நிறைவேற்றியுள்ளதாக அவதானிக்கப்பட்டது.

| நிதிப்பிரமாணம் | நிதிப்பிரமாணம் 128(1) இன் பிரகாரம் கணக்கீட்டு உத்தியோகத்தரின் கணக்களித்தகைமை | கணக்கீட்டு உத்தியோகத்தர் இந்த ஒழுங்குவிதிகளுடன் இணங்கி நடக்காமை | அவதானிப்புக்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கையின் பந்திக்கான தொடர்பு |
|---|---|---|---|
| 128(1)(அ) | அரசாங்கத்தால் நிர்ணயிக்கப்பட்டு காட்டப்பட்டுள்ள கொள்கைகள் மற்றும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நடவடிக்கைகளுக்காக நிதி ஏற்பாடுகளை வழங்கி கொடுப்பதில் பாராளுமன்றத்தின் சவால்களைக் கவனத்தில் கொண்டு தமது திணைக்களத்தின் நடவடிக்கைகளை வெளிப்படைத் தன்மையுடன் திட்டமிட்டு செயற்படுத்துவதற்கும் மற்றும் நடப்பாண்டிற்காக நிர்ணயிக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களை பூரணப்படுத்துவதற்கு மற்றும் / அல்லது நிர்ணயித்த இலக்குகளை நிறைவேற்றுவதற்கு முயற்சிகள் எடுத்தல் | 1. செயல்நடவடிக்கை திட்டம் தயாரிக்கப்பட்டிராமை | 2.1.1 |
| | | 2. பெறுகை நடவடிக்கைகள் போதியளவில் திட்டமிடப்படாமை. | 2.2.1 |
| | | 3. பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை | 2.11 |
| | | 4. எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டம் அடையப்பெற்றிராமை | 2.1.2 |
| 128(1)(ஆ) | தமது திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்கும் கணக்கீட்டு முறைக்குமுள்ள ஒழுங்குகள் வெற்றிகரமாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அரசிற்கு கிடைக்க | பெறுகை நடைமுறையை அமுல்படுத்துவதிலான குறைபாடுகள் | 2.2.2 |

| | | | |
|---|---|---|---|
| | வேண்டிய கட்டணங்களை ஒழுங்காக உறுதிப்படுத்துவதற்கும் அவற்றை முறையாகவும் முழுமையாகவும் உடனடியாக சேகரிப்பதற்கும் கிடைக்கப்பெறும் பணத்தை கணக்கு வைப்பதற்கும் அரசிற்காக பொறுப்புக்களில் கடப்பாடுகளுக்காக அதிகாரமளிப்பதற்கும் நிறைவேற்றப்பட்ட சேவைகள் வழங்குதல் கண்காணிப்பு மற்றும் பரீட்சிப்பதற்கும் அந்த அரசின் நிதியிலிருந்து அற்காக உடனடியாகவும் தாமதமின்றியும் சரியாக கொடுப்பனவு செய்வதற்கும் அதற்கு போதியளவு ஏற்பாடுகள் செய்யப்படுகின்றதெனவும் | | |
| 128(1)(இ) | நிதிப் பிரமாணம் மற்றும் அரசிக் ஏனைய குறைநிரப்பு அறிவுறுத்தல்களையும் தனது திணைக்களம் பின்பற்றப்படுவதாகவும் தேவையான சந்தர்ப்பங்களில் அவற்றிற்கு மேலதிகமாக திணைக்கள அறிவுறுத்தல்கள் வழங்கப்படுகின்தெனவும் | இணங்காமைகள் | 2.12 |
| 128(1)(ஈ) | பெறுகை, கொடுப்பனவு மற்றும் விநியோகம் என்பவற்றிகாக போதியளவு உள்ளக சோதனை முறைமையொன்று பேணிச் செல்லப்படுவதாகவும் அம்முறைமையின் செயற்பாடு காலத்திற்கு காலம் பரீட்சிக்கப்படுகின்றதெனவும் | அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கில் குறிப்பிடப்பட்டிருந்த குறைபாடுகள் | 2.8 |
| 128(1)(உ) | அரசாங்கத்திற்குச் சொந்தமான அல்லது அரசின் கட்டுக்கோப்பில் காணப்படும் பணம், பொருட்கள் உபகரணங்கள் மற்றும் ஏனைய சொத்துக்களை பாதுகாப்பாக வைத்திருத்தல் மற்றும் பாதுகாப்பதற்காக போதியளவிலும் முறையாகவும் ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அவை காலத்திற்குக் காலம் சரி பார்க்கப்படுகின்றதெனவும் அவற்றை தீர்வுசெய்யும் போது அவ்வாறு தீர்வுசெய்தல் உரிய ஒழுங்கு | சொத்துக்கள் முகாமைத்துவத்திலான குறைபாடுகள் | 2.3 |

| | | | | |
|---|---|---|---|---|
| | விதிகளுக்கும் அறிவுறுத்தல்களுக்கும் இணங்க உள்ளன எனவும் | | | |
| 128(1)(ஐ) | அரசின் அலுவல்களை நிறைவேற்றும் போது எதிர்பார்க்கப்பட்ட சிக்கனம், செயற்திறன், ஒழுக்கமுடைமை, நேர்மை போன்ற விடயங்களுக்கு உரிய மதிப்பினை வழங்கி தமது திணைக்களத்தின் முயற்சிகள் செய்யப்படுவதெனவும் | 1. | முகாமைத்துவ நலிவுகள் | 2.6 |
| | | 2. | முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள் | 2.4 |
| 128(1)(ஏ) | உத்தியோகத்தர்களின் / ஊழியர்களின் தாமதம், கவனயீனம், தவறுகள் அல்லது மோசடியால் அரசிற்கு நட்டம் ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் நிதிப் பிரமாணம் 103 முதல் 108 வரையான பிரமாணங்களில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளை கணக்கீட்டு உத்தியோகத்தர்களினால் பின்பற்றப்பட்டதாகவும், நிதிப் பிரமாணம் 156(1) இன் பிரகாரம் அந்நட்டங்கள் தொடர்பாக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்கள் / ஊழியர்கள் பேரில் மிகை கட்டணங்கள் விதிக்கப்படுமெனவும் (பொறுப்புக்கூறல் தொடர்பில் போதியளவான ஏற்பாடுகளை ஈடுபடுத்தல் விசேடமாக அவர்களின் கடமையாகும்.) | 1. | சொத்துக்களிலிருந்து அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானங்கள் கிடைக்கபெறாமை | 2.3(ஆ) |
| | | 2. | பணம் தொடர்பில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களிடமிருந்து பிணை வைப்புகளை பெற்றுக்கொள்ளாமை. | 2.15 |

## 2. பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 2.1 செயலாற்றல்

#### 2.1.1 திட்மிடல்

2017 ஆம் ஆண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டம் 2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. எவ்வாறெனினும் தயாரிக்கப்பட்டிருந்த செயல்நடவடிக்கைத் திட்டம் தொடர்பில் பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) எதிர்பார்க்கப்பட்ட பிரதான பணிகள் நிறைவேற்றப்படும் விதத்தில் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிற்கு நாளதுவரையாக்கப்பட்ட நிறுவனத்தின் நிறுவனக் கட்டமைப்பு, அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பதவியணி தொடர்பான விபரங்கள் செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டிற்குரிய பாதீட்டினை அடிப்படையாக கொண்டு முன்னுரிமையின் அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயற்பாட்டுத்திட்டம் (Activity Plan), நடைமுறைப்படுத்தப்பட்ட கால அட்டவணை (Time Line) டற்றும் அந்த செயற்பாடுகளிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட அடைவு / பிரதிபலன் (Out put / Out come) மதிப்பிடப்பட்டு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

(ஈ) வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைப்பாட்டு திட்டம், செயல்நடவடிக்கைத் திட்டத்துடன் (Imprest Requirement Plan) முன்வைக்கப்பட்டிருக்கவில்லை.

**2.1.2 பணிப்பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை**

---

**எதிர்பார்க்கப்பட்ட அடைவு மட்டத்தினை பெற்றிராமை**

---

நூதனசாலைகள் திணைக்களத்திற்கு நீர்த் தாங்கியொன்றை நிர்மாணிப்பதற்காக மதிப்பீடு செய்யப்பட்ட குறைநிரப்புத் தொகையான ரூபா 19,031,511 தொகை 2016 ஆம் ஆண்டின் போது பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும், 2017 மே மாதம் பூர்த்தி செய்தல் நிறைவு செய்யப்பட வேண்டிய நீர்த்தாங்கியை நிர்மாணிக்கும் பணிகள் 2018 ஆகஸ்ட் மாதம் வரையிலும் நிறைவு செய்யப்பட்டிருக்கவில்லை.

**2.1.3 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைதல்**

---

நிலைபேறான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆம் ஆண்டு ‘‘நிகழ்ச்சி நிரல்’’ இன் பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் செயற்பட வேண்டியதுடன் மீளாய்வாண்டிற்குரியதாக திணைக்களத்தினால் தமது விடயப்பரப்பின் கீழ் எடுக்கப்படும் பணிகள் தொடர்பில் எவ்வாறு செயற்பட வேண்டும் என்பது தொடர்பில் அறிந்திருந்தனர். இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஏதேனுமொரு பணியொன்றின் சரியான செயலாற்றலை அளவிடுவதற்கு சரியானதொரு தரவு அடிப்படையொன்று காணப்படுதல் அவசியமான போதிலும், திணைக்களத்தினால் நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை அடைதலை அளவிடுவதற்கான சரியான தரவு அடிப்படையொன்றினை உருவாக்க தவறியிருந்தது.

(ஆ) நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக ஆயத்தமாகும் போது வேறு அரச நிறுவனங்களுடன் தொடர்புபட்டு செயற்பட்டமைக்கான சான்றுகள் காணப்படவில்லை.

**2.2 பெறுகை நடைமுறையினூடாக வழங்கல்கள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்ளல்**

---

**2.2.1 பெறுகையினை திட்டமிடல்**

---

திணைக்களத்திற்கு மீளாய்வாண்டின் போது பெறுகை நடைமுறையினூடாக வழங்கல் மற்றும் சேவைகளை நிறைவேற்றுவதற்காக ரூபா 51.8 மில்லியன் தொகையான நிதியேற்பாடு மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன், அவற்றுள் ரூபா 49.5 மில்லியன் பயன்படுத்தப்பட்டிருந்தது. ஏற்பாடு செய்யப்பட்டிருந்த நிதியேற்பாடு தொடர்பில் 2017 ஆம் ஆண்டிற்காக பெறுகைகள்

வழிகாட்டிக் கோவையின் 4.2.1 வழிகாட்டிக்கமைய விரிவான பெறுகைகள் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.2.2 பெறுகை நடைமுறையை அமுல்படுத்தல்

பின்வரும் அவதானிப்புகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(அ) நூதனசாலைகள் திணைக்களத்தின் 2017 ஆம் ஆண்டிற்கான பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை நடாத்துவதற்காக பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 8.9(ஆ) வழிகாட்டியிலிருந்து விலகி ரூபா 540,000 தொகையான பணம் தனியார் நிறுவனமொன்றிற்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டிருந்த தீயணைப்பு கட்டமைப்பினை தாபிக்கும் ஒப்பந்தத்தின் உடன்படிக்கையின் உடன்படிக்கைப் பெறுமதி ரூபா 19,867,214 ஆக இருந்ததுடன், அது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) ஒப்பந்தத்திற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்த செயலாற்றல் காப்பீட்டின் காலமானது 2017 சனவரி 19 ஆந் திகதி நிறைவடைந்திருந்தது. 2018 யூலை 30 ஆந் திகதி வரையிலும் ஒப்பந்தம் நிறைவு செய்யப்பட்டிராமையால், அந்தக் காலத்தினை உள்ளடக்கும் வகையில் செயலாற்றல் காப்பீட்டின் காலத்தினை நீடிப்பு செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) தீயணைப்பு முறைமையின் மதியுரை நிறுவனமாக செயற்பட்டிருந்த பொறியியல் பணிகளுக்கான மத்திய உசாத்துணை பணியகத்திற்கு ரூபா 2,498,942 செலுத்தப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் பணியகத்தினால் திட்டங்கள் மற்றும் மதிப்பீடுகளை தயாரிக்கும் போது தீயணைப்பு கட்டமைப்பிற்கு தேவையான நீர் மற்றும் மின்சாரத்தினை விநியோகித்தல் தொடர்பில் கவனம் செலுத்தாது, மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டமையால் 2015 ஆம் ஆண்டின் போது ஆரம்பிக்கப்பட்ட இந்த செயற்திட்டம் 2018 ஆகஸ்ட் மாதம் வரையிலும் நிறைவு செய்ய முடியாதிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் தீயணைப்பு கட்டமைப்பிற்காக நீர்த் தாங்கியொன்றை நிர்மாணிக்கும் ஒப்பந்தத்தில் செயன்முன்னேற்ற அறிக்கைகளை கவனத்திற் கொள்ளாது அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 19,031,510 தொகையை முழுத் தொகையும் செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அரசாங்க பொறியியல் கூட்டுத்தாபனத்தினால் உப ஒப்பந்தம் கையளிக்கப்பட்டமையின் காரணத்தால் 2018 ஆகஸ்ட் வரையிலும் பணி நிறைவு செய்யப்பட்டிராமையால் தீயணைப்பு பாதுகாப்பு கட்டமைப்பினை நடைமுறைப்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாகியிருந்தது.

### 2.3 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்தின் சொத்துக்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வு பரிசோதனைகளின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

#### (அ) வாகனப் பயன்பாடு

திணைக்களத்திற்கு சொந்தமாக மீளாய்வாண்டின் இறுதியில் பின்வருமாறு 07 வாகனங்கள் காணப்பட்டதுடன், அந்த வாகனங்களில் 61,712 கிலோ மீட்டர்கள் ஓட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டிருந்ததுடன், அதற்காக எரிபொருள் மற்றும் உராய்வு

எண்ணெய் ஆகியவற்றுக்காக ரூபா 801,636 தொகையும், வாகன சேவைப்படுத்தலுக்காக ரூபா 165,884 தொகையும், வாகன பழுதுபார்த்தலுக்காக ரூபா 1,063,447 தொகையும், வாகனத்தை காப்புறுதி செய்வதற்காக ரூபா 238,711 படியாக ரூபா 2,580,668 கூட்டுத்தொகை செலவிடப்பட்டிருந்தது. அதற்கமைய திணைக்களத்தினால் வாகனத்தை ஓட்டத்தில் ஈடுபடுத்துவதற்காக சாரதி சம்பளங்கள் மற்றும் படிகள் நீங்கலாக ஒரு கிலோ மீட்டருக்காக ரூபா 42 செலவிடப்பட்டிருந்தது.

**(ஆ) சொத்துக்களில் அரசாங்கத்திற்கு கிடைக்க வேண்டிய வருமானம் கிடைக்கப்பெற்றிராமை**

---

நூதன சாலைகள் திணைக்களத்திற்குரிய 8,000 கன அடி அளவான பழைய சிற்றுண்டிச்சாலைக் கட்டிடத்தை குத்தகைக்கு வழங்குதல்.

(i) திணைக்களத்தினால் புடவைக் கைத்தொழில் சபைக்கு பரிசுகள் மற்றும் உற்சவப் பொருட்களின் விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்காக வாடகை அடிப்படையில் பழைய சிற்றுண்டிச்சாலைக் கட்டிடத்தை வழங்கியமையால் 2011 ஆகஸ்ட் முதல் 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் கிடைத்திருந்த குத்தகை வாடகை ரூபா 2,314,683 ஆகும். எவ்வாறெனினும், 2017 ஆம் ஆண்டின் போது அரசாங்க மதிப்பீட்டாளரால் 2011 ஆம் ஆண்டு முதல் 2017 ஆம் ஆண்டு வரையிலும் செலுத்த வேண்டிய குத்தகை வாடகை ரூபா 51,303,000 ஆக மதிப்பீடு செய்யப்பட்டிருந்த காரணத்தால் அந்த காலப்பகுதிக்காக குறைவாக அறவிடப்பட்டிருந்த குத்தகை வாடகை ரூபா 48,988,317 ஆகும்.

(ii) மேலும் புடவைக் கைத்தொழில் சபையினால் உடன்படிக்கை நிபந்தனைகளுக்கு முரணாக அந்தக் கட்டிடத்தின் 500 அடி அளவானது உணவு மற்றும் குடிபான விற்பனை நிலையமொன்றை நடாத்திச் செல்வதற்காக தனியார் நிறுவனமொன்றிற்கு மாதாந்தம் ரூபா 100,000 ஆன வாடகைக்கும் மற்றும் அந்த நிறுவனத்தின் அதிகரிக்கும் புரள்வின் அடிப்படையில் 7.5 சதவீதமான முதல் 25 வீதம் வரையான வாடகைக்கு இடைக்குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது. அரசாங்க மதிப்பீட்டாளரின் அறிக்கைக்கமைய 2013 ஆகஸ்ட் முதல் 2017 திசெம்பர் வரையிலும் அந்த பிரிவின் வாடகை ரூபா 4,134,000 ஆகும். நூதனசாலைகள் திணைக்களம் இடைக்குத்தகையாளரை நீக்குவதற்கு அல்லது இடைக்குத்தகையை சட்டரீதியாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இந்த சிற்றுண்டிச்சாலை இரவு 9.00 மணி வரையிலும் திறந்து வைக்கப்பட்டிருந்தமையால் வெளி நபர்களுக்கு நூதனசாலை வளாகத்திற்கு உட்பிரவேசிப்பதற்காக சந்தர்ப்பம் காணப்பட்டடை நூதனசாலையின் பாதுகாப்பிற்கு அச்சுறுத்தலாக அமைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**(இ) வெளிவாரி தரப்பினருக்கு வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள்**

---

பின்வரும் அவதானிப்புகள் பெற்றுக்கொள்ளப்பட்டிருந்தன.

(i) நூதனசாலையின் தச்சுக்கூடம் அமைந்துள்ள எல்லைப் பிரதேசத்தினுள் வெளிவாரித் தரப்பினரால் அத்துமீறி நிர்மாணிக்கப்பட்டிருந்த தற்காலிக கட்டிடமொன்று காணப்படுவதாக பௌதீக பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது. அந்தக் கட்டிடத்தை அகற்றுவதற்கு தேவையான சட்டரீதியான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) நூதனசாலை வளாகத்தில் நடாத்திச் செல்லப்படும் உப தபால் அலுவலகத்திற்காக எவ்விதமான மதிப்பீடும் மேற்கொள்ளாது மாதாந்தம் ரூபா 375 மாத்திரம் அறவிடும் அடிப்படையில் நீண்ட காலமாக நபரொருவருக்கு வழங்கியிருந்ததுடன், இதற்காக கிடைக்க வேண்டிய வருமானங்களை உரிய முறையில் நடவடிக்கை எடுக்கப்பட்டடிருக்கவில்லை. மேலும் அரசாங்க மதிப்பீடு பெற்றுக்கொள்ளப்பட்டு காலரீதியின் வாடகையை மாற்றியமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 2.4 முறையற்ற கொடுக்கல் வாங்கல்கள்

திணைக்களத்தினால் நடாத்திச் செல்லப்படும் சிற்றுண்டிச்சாலையின் மின்சாரப் பாவனையை கணிப்பிடும் மானியொன்று பொருத்தப்படாது மின்சாரம் எல்லையின்றி பயன்படுத்தப்படுவதற்கு இடமளிக்கப்பட்டமையால் 2015 ஆம் ஆண்டின் போது சிற்றுண்டிச்சாலையை நடாத்திச் சென்றவர்களிடமிருந்து ரூபா 107,646 தொகையான பணத்தை அறவிடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருந்தது. எனினும், சிற்றுண்டிச்சாலையை குத்தகைக்கு வழங்குதல் தொடர்பில் உடன்படிக்கை இல்லாதிருந்தமையால் அந்த பணத்தை அறவீடு செய்ய முடியாதிருந்தது.

### 2.5 தீர்க்கப்பட்டிராத கணக்காய்வு பந்திகள்

திணைக்களத்திற்குரிய கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையில் உள்ளடக்கப்பட்டிருந்த கணக்காய்வு பந்திகளில் சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த குறைபாடுகள் தொடர்பில் திணைக்களத்தினால் திருத்தப்பட்டிராத பந்திகளுக்கான தொடர்பு பின்வருமாறு.

| **கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையுடனான தொடர்பு** | | **தொடர்புடைய விடயம்** |
|---|---|---|
| **வருடம்** | **பந்தி இலக்கம்** | |
| 2016 | 3.4(ஆ) | சொத்துக்களை கையேற்பதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| | 3.5(ஆ) | இரத்தினபுரி நூதனசாலையின் மலசலகூட கட்டமைப்பிலான குறைபாடுகள் |
| | 3.8(அ) | கொழும்பு நூதனசாலையில் இடம்பெற்ற அருங்கலைப் பொருட்களின் திருட்டு |
| | 3.8(ஆ) | இரத்தினபுரி நூதனசாலை அதிகாரி உத்தியோகபூர்வ இல்லம் 2013 ஆம் ஆண்டு முதல் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |
| | 3.8(ஏ) | நூதன சாலை காட்சிப் பிரிவில் அச்சிடப்பட்ட புத்தகங்களுக்காக சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையொன்றிற்காக ISBN இலக்கத்தினை பெற்றுக் கொள்ளாமை |
| | 3.9(ஆ) | இரத்தினபுரி நூதனசாலையின் புனரமைப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படாமை |

3.9(இ) கொழும்பு நூதனசாலையின் பாதுகாப்பு கெமரா (CCTV) கட்டமைப்பின் பின்னூட்டல் (Backup) பேணப்படுவது சர்வர் (Server) ஒன்றில் ஒரு இடத்தில் மட்டும் சேமிக்கப்பட்டுள்ளதுடன், இந்த இடத்தில் தீயணைப்பு உபகரணங்களும் பொருத்தப்பட்டிருக்காமை

3.9(உ) நூதனசாலையை பார்வையிடுவதற்கு வருகை தரும் பார்வையாளர்களுக்கு போதியளவான ஆகக்குறைந்த வசதிகளேனும் பூர்த்தி செய்யப்பட்டிருந்த சிற்றுண்டிச்சாலையொன்று இல்லாதிருந்தமை.

**2.6 முகாமைத்துவ நலிவுகள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 1942 இன் 31 ஆம் இலக்க தேசிய நூதனசாலைகள் கட்டளைச் சட்டம் பரிசீலிக்கப்பட்டு இலங்கையின் தற்கால மற்றும் எதிர்கால தேவைகளுக்குப் பொருத்தக்கூடிய முறையில் புதிய சட்டமொன்றை நிர்மாணிக்கும் நோக்கில் 2014 ஆகஸ்ட் 29 ஆந் திகதிய 14/1269/555/010 ஆம் இலக்க அமைச்சரவை பிரமாணம் குறிப்பு முன்வைக்கப்பட்டிருந்தது. அவ்வாறு கலந்துரையாடியதன் பின்னர் வழங்கப்படும் பரிந்துரைகளுக்கமைய சட்ட வரைபு வரையுனரால் திருத்திற்குள்ளாக்கப்பட்டு 2015 யூலை 07 ஆந் திகதியளவில் நிறைவு செய்யப்பட்டிருந்தது. 2018 ஆகஸ்ட் மாதம் அளவில் புதிய சட்டத்தினை அங்கீகரித்துக்கொள்ளும் பணிப்பொறுப்புக்கள் நிறைவு செய்யப்படாமையால், தற்கால மற்றும் எதிர்கால தேவைப்பாடுகளுக்கு பொருந்தும் வகையில் திணைக்களத்தினை மீள் கட்டமைக்கும் பணிகள் தாமதமடைந்திருந்தது.

(ஆ) 2008 பெப்ரவரி 06 ஆந் திகதிய 05/2008 ஆம் இலக்க அரசாங்க நிர்வாகச் சுற்றறிக்கையின் பிரகாரம் அனைத்து அரச நிறுவனங்களாலும் தமது நிறுவனங்களுக்காக பிரஜைகள் கட்டளைச் சட்டம் அறிமுகப்படுத்தப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறெனினும், இது தொடர்பில் திணைக்களம் அறிந்திராததுடன், அரச நிறுவனமொன்றிடமிருந்து சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் மக்களின் தேவைகளை துரிதமாக, செயற்றிறனுடன், தாரமானதாக மற்றும் தொடர்ச்சியான நிறைவேற்றப்படுவதான எழுத்து மூலமான கடப்பாடொன்று எனும் விதத்தில் தாபிக்கப்பட வேண்டிய பிரசைகள் சேவை பெறுநர் நியதிச்சட்டத்தினை தாபிப்பதற்கு சந்தர்ப்பம் கிடைத்திருக்கவில்லை.

(இ) 2016 நவம்பர் 22 ஆந் திகதி விபத்துக்குள்ளான WACAD - 1559 ஆம் இலக்க மோட்டார் வாகனத்தின் பழுதுபார்த்தல் பணிகளுக்காக உள்நாட்டு முகவர் நிறுவனத்தினால் ரூபா 5,795,096 தொகையான மதிப்பீடொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. எவ்வாறெனினும் பின்னர் தனியார் நிறுவனமொன்றினூடாக ரூபா 505,464 தொகையான மதிப்பீடொன்று பெற்றுக்கொள்ளப்பட்டு அந்த நிறுவனத்திற்கு பழுதுபார்ப்பதற்கு வழங்கப்பட்டு சுமார் 1 ½ வருடம் கடந்திருந்த போதிலும், அந்த தாமதத்திற்கு காரணமாக அமைந்த விடயங்கள் தேடிக் கண்டறியப்பட்டிருக்கவில்லை. 2018 ஆகஸ்ட் 15 ஆந் திகதி வரையிலும் பழுதுபார்த்தல் பணிகளை நிறைவு செய்து வாகனத்தை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) கொழும்பு நூதனசாலையின் புராதன பொருட்களின் மதிப்பாய்வொன்று முன்வைக்கப்பட்டிருக்கவில்லை. மேலும், கண்டி மற்றும் இரத்தினபுரி பிரதேச நூதனசாலையின் அருங்கலைப் பொருட்களின் மதிப்பாய்வானது 2018 ஆகஸ்ட் மாதம் வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(உ) 2017 திசெம்பர் மாதத்தின் போது விளம்பரப் பலகைகள் (Display panels) புகைக்கான கவசங்கள் மற்றும் தளபாடங்களை கொள்வனவு செய்வதற்காக கொடுப்பனவினை மேற்கொள்ளும் போது நிதிப்பிரமாணம் 137(5) இன் ஏற்பாடுகளுக்கமைய செயற்பட்டிருக்கவில்லை. அதற்கமைய பொருட்கள் கிடைக்காதிருந்த போது வாங்குபொருள் விலை பட்டியலின் (Proforma Invoice) அடிப்படையில் 8 சந்தர்ப்பங்களில் ரூபா 6,152,931 கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டிருந்தது.

(ஊ) 2017 திசெம்பர் மாதத்தின் போது கொடுப்பனவுகளாக குறிப்பிடப்பட்டிருந்த ஒப்பந்தங்கள் மற்றும் வழங்குநர்களுக்கு வரையப்பட்ட ரூபா 31,647,312 கூட்டுத்தொகையான 07 காசோலைகள் 2018 மே 03 ஆந் திகதியும் பிரதான கணக்காளரின் பொறுப்பில் காணப்பட்டது.

## 2.7 கடமைப் பொறுப்புக்களை நிறைவேற்றுவதற்காக பாராளுமன்றத்தால் வழங்கப்பட்ட நிதி ஏற்பாட்டை பயன்படுத்துதல்

2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த 05 ஆண்டுகள் காலத்தில் திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ள நிதி ஏற்பாடு, பயன்பாடு, சேமிப்பு என்பன தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் கீழே தரப்படுகின்றன.

| ஆண்டு | செலவு வகை | தேறிய நிதி ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | தேறிய நிதி ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | |
| 2013 | மீண்டுவருபவை | 112.77 | 105.92 | 6.85 | 6.07 |
| | மூலதனம் | 92.40 | 45.30 | 47.10 | 50.97 |
| | மொத்தம் | **205.17** | **151.22** | **53.95** | **26.30** |
| 2014 | மீண்டுவருபவை | 125.93 | 125.54 | 0.39 | 0.31 |
| | மூலதனம் | 127.05 | 120.50 | 6.55 | 5.16 |
| | மொத்தம் | **252.98** | **246.04** | **6.94** | **2.74** |
| 2015 | மீண்டுவருபவை | 161.44 | 149.85 | 11.59 | 7.18 |
| | மூலதனம் | 147.86 | 118.39 | 29.47 | 19.93 |
| | மொத்தம் | **309.30** | **268.24** | **41.06** | **13.28** |
| 2016 | மீண்டுவருபவை | 159.87 | 157.85 | 2.02 | 1.26 |
| | மூலதனம் | 177.92 | 175.91 | 2.01 | 1.13 |
| | மொத்தம் | **337.79** | **333.76** | **4.03** | **1.19** |
| 2017 | மீண்டுவருபவை | 186.96 | 184.90 | 2.06 | 1.10 |
| | மூலதனம் | 96.91 | 67.48 | 29.43 | 30.37 |
| | மொத்தம் | **283.87** | **252.38** | **31.49** | **11.09** |

**2.8 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள்**

திணைக்களத்திற்குரிய 20801 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக பாராளுமன்றத்தால் விதிக்கப்பட்ட எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே தரப்படுகின்றன.

| செலவு | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|
| உச்ச எல்லை | உள்ளபடியானவை | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானவை | உச்ச எல்லை | உள்ளபடியானவை |
| ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் | ரூபா மில்லியன் |
| 15 | 14.8 | 8 | 9.5 | 49 | 36.7 |

இது சம்பந்தமாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

**நிலுவையாக இருந்த கடன் மீதிகளை அறவீடு செய்யாமை**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட இணக்கக்கூற்றின் பிரகாரம், 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான அறவீடுகள் நிலுவையாகக் காணப்பட்ட மீதிகளின் மொத்த தொகையானது இடமாற்றம் பெற்றுச் சென்ற உத்தியோகத்தர்களின் கடன் மீதிகளைத் தவிர்த்து ரூபா 1,779,843 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதியானது 01 இலிருந்து 23 ஆண்டுகள் வரையான காலமாக முன்கொண்டுவரப்பட்டவாறு இருந்த போதிலும், அந்த நிலுவை கடன் மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான மட்டத்தில் காணப்பட்டது.

**2.9 கட்டுநிதிக் கணக்கு**

திணைக்களத்தின் புத்தகங்களுக்கமைய 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான கட்டுநிதிக் கணக்கின் மீதியானது ரூபா 50,524 தொகையாக இருந்ததுடன், திறைசேரி கணனி அச்சீடுகளின் பிரகாரமான மீதியானது ரூபா 113,587 ஆனமையால் ரூபா 63,063 தொகையான இணங்காமைகள் அவதானிக்கப்பட்டன.

**2.10 வங்கி கணக்குகளை நடைமுறைப்படுத்தல்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

**சீராக்கப்பட வேண்டிய மீதிகள்**

திணைக்களத்தின் வங்கிக் கணக்கிற்குரியதாக சமர்ப்பிக்கப்பட்டிருந்த வங்கி இணக்கக்கூற்றுக்களை பரீட்சிக்கும் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) வழங்கப்பட்ட போதிலும், வங்கிக்கு சமர்ப்பிக்கப்படாதிருந்த ரூபா 1,864,058 கூட்டுத்தொகையான 04 காசோலைகள் தொடர்பில் நிதிப்பிரமாணம் 396(ஈ) இன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளபடியான இனங்காணப்படாத பெறுவனவுகளின் பெறுமதியானது ரூபா 266,761 தொடர்பில் அந்த மீதிகள் இனங்காணப்பட்டு தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.11 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்பட்டிராமை

திணைக்களத்தினால் கீழ்க் குறிப்பிடப்படும் பதிவேடுகள் பேணப்பட்டிராததுடன் சில பதிவேடுகள் முறையாகவும் நாளதுவரையாகவும் பேணப்பட்டிருக்கவில்லை என்பது கணக்காய்வு தெரிவுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய நிதிப்பிரமாணங்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணனி உபபாகங்கள் மற்றும் மென்பொருட்கள் தொடர்பான நிலையான சொத்துக்கள் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய IAI/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | பேணப்பட்டிருக்கவில்லை |
| (ஆ) | நிலையான சொத்துக்கள் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கை | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (இ) | நட்டங்கள் மற்றும் இழப்புக்கள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 | நாளதுவரையாக்கப் பட்டிருக்கவில்லை. |
| (ஈ) | பிணைகள் பதிவேடு | நிதிப்பிரமாணம் 891(i) | பேணப்பட்டிருக்கவில்லை |

## 2.12 இணக்கமின்மைகள்

### 2.12.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் என்பவற்றுடனான இணக்கமின்மைகள்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவையின் நிதிப்பிரமாணம் 260, 389(அ) இன் பிரகாரம் உரிய நபருக்கு பணம் செலுத்தப்பட வேண்டியதுடன், அதன் போது கொடுப்பனவு மேற்கொள்பவரின் தனித்துவத்தை உறுதி செய்யக் கூடிய முறையில் உரிய தகவல்கள் பெற்றுக்கொள்ளப்பட வேண்டும். எவ்வாறெனினும், ரூபா 4,300,357 பெறுமதியான காசோலைகளை பொறுப்பேற்கும் போது உரிய பதிவேட்டின் காசோலைகளை கையளித்த திகதி மற்றும் காசோலைகளை பொறுப்பேற்றவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்த தேவையான தகவல்கள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லை.

### 2.12.2 வரித் தேவைப்பாடுகளுடன் இணங்காமை

பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 5.4.12 வழிகாட்டிக்கமைய 2017 ஆம் ஆண்டிற்குரிய VAT (பெறுமதி சேர் வரி) வரி மேவுகைக்காக பணம் செலுத்தியதன் பின்னர் அதற்கடுத்த மாதத்தின் 15 ஆந் திகதிக்கு முன்னர் அந்த கொடுப்பனவுகள் தொடர்பில் உள்நாட்டு இறைவரி ஆணையாளருக்கு அறிவிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2.13 உள்ளகக் கணக்காய்வு

நிதிப்பிரமாணம் 133 இற்கமைய உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்றை தாபித்து உள்ளக கணக்காய்வாளர் ஒருவர் மற்றும் பதவியணிக்காக ஒரு உத்தியோகத்தர் மாத்திரம் நியமிக்கப்பட்டிருந்தனர். போதியளவான பதவியணியொன்று நியமிக்கப்பட்டிராமையால் உள்ளக கணக்காய்வு பிரிவினை தாபித்தமைக்கான நோக்கங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

## 2.14 மனிதவள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர், உள்ளபடியான பதவியணியினர் மற்றும் ஆளணி வேதனங்களுக்கான செலவு**

திணைக்களத்தின் கடமைகளை நிறைவேற்றுவதற்காக 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான அங்கீகரிக்கப்பட்ட, உள்ளபடியான, வெற்றிடமான மற்றும் மிகையான பதவியணியினர் தொடர்பான விபரம் கீழே தரப்பட்டுகின்றன. மீளாய்வாண்டிற்காக திணைக்களத்தினால் ஆளணி வேதன செலவுத் தொகுதி தொடர்பாக ரூபா 142.7 மில்லியன் செலவு செய்யப்பட்டிருந்தது. அதற்கிணங்க ஒரு நபருக்கான செலவு ரூபா 443,168 ஆக இருந்தது.

| | ஆளணி வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் | உள்ளபடியான பதவியணியினர் | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட மட்டம் | 15 | 7 | 8 |
| (ii) | மூன்றாம் மட்டம் | 4 | 2 | 2 |
| (iii) | இரண்டாம் மட்டம் | 123 | 70 | 53 |
| (iv) | ஆரம்ப மட்டம் | 258 | 243 | 15 |
| | மொத்தம் | 400 | 322 | 78 |

இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) திணைக்களத்தில் பின்வரும் பதவியணி வெற்றிடங்கள் நிலவியமையால் செயற்திறன் வீழ்ச்சியடைந்தமைக்கு காரணமாக அமைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

(i) நூதனசாலைகள் திணைக்களத்தில் இருக்க வேண்டிய சிரேஷ்ட, மூன்றாம் நிலை மற்றும் இரண்டாம் நிலையிலான உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 142 ஆக இருந்த போதிலும், 2017 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் அவற்றுள் 63 பதவி வெற்றிடங்கள் நிலவின.

(ii) பாதுகாப்பு உதவியாளர், விலங்கின விஞ்ஞான உதவியாளர் உள்ளடங்கலான திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட 9 பதவிகளில் 8 பதவிகள் தற்போது வெற்றிடமாக இருந்தது.

(ஆ) கொழும்பு நூதனசாலையின் 2012 மார்ச் மாதம் இடம்பெற்ற நூதனப் பொருட்களின் களவு மற்றும் 2014 நவம்பர் மாதம் இடம்பெற்ற அத்துமீறிய பிரவேசம் போன்ற சம்பவங்கிளன் அடிப்படையில் நூதனசாலையின் பாதுகாப்பு தொடர்பில் விசேடமாக கவனம் செலுத்தப்பட்ட வேண்டும். எவ்வாறெனினும், 8 பாதுாகாப்பு உத்தியோகத்தர்களில் 7 பதவிகள், அதாவது பிரதான பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பதவியும், 5 பாதுகாப்பு உதவியாளர்கள் பதவிகள் மற்றும் உதவி காவல் பரிசோதகர் பதவியும் வெற்றிடமாக இருந்த போதிலும் அந்த வெற்றிடங்களை நிரப்புவதற்கு இதுவரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணிக்கு இரு தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப உதவியாளர் பதவியும் தகவல் தொழில்நுட்ப பதவியும் உள்ளடங்கியிருந்த போதிலும், அந்த 4 பதவிகளும் வெற்றிடமாகக்

காணப்பட்ட காரணத்தினால் பாதுகாப்பு கெமரா முறைமையின் பணிகள் அதனை பொருத்திய கம்பனியின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் மேற்பார்வையின் கீழ் பேணுவதற்கு நேர்ந்திருந்தது.

(ஈ) திணைக்களத்தின் பல்வேறு பணிகளில் முன்னுரிமையான பல்வேறு துறைகளுக்குரிய ஆதனங்கள் மற்றும் மாதிரிகளை சேகரித்தல், பதிவேட்டிற்கு உட்படுத்தல் குறிப்பிடப்பட்டிருந்தது. இந்த பணிக்காக உதவியளிக்கும் பதவியணியின் கீழ் உள்ளடங்கும். பூச்சியல் விஞ்ஞான உதவியாளர், தாவரவியல் விஞ்ஞான உதவியாளர் மற்றும் விலங்கின விஞ்ஞான உதவியளார் ஆகிய அனைத்து பதவிகளும் வெற்றிடமாக இருந்தமை மேற்படி பணியை நிறைவேற்றத் தடையாக அமைந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

**2.15 அரச உத்தியோகத்தர்களுக்கு பிணை வைத்தல்**

---

நிதிப்பிரமாணம் 880 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கமைய பிணை வைக்கப்பட வேண்டிய உத்தியோகத்தர்களால் பிணை வைக்கப்பட்டிருக்கவில்லை.